# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 10.11.2020

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3648/B/2019**

| | |
|---|---|
| திருமதி. K. ஈஸ்வரி | மேல்முறையீட்டாளர் |
| எதிர் | |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆத்தூர் வட்டம்,<br>சேலம் மாவட்டம். | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் சார்பாக அவரது கணவர் திரு. M.கந்தசாமி மற்றும் பொது தகவல் அலுவலர், திருமதி.நாகலட்சுமி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 26.11.2018 தேதியிட்ட மனுவில், ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து மனுதாரரால் பெறப்பட்ட கடிதத்தின் பார்வை என்ற தலைப்பில் காணப்படும் கடிதங்களின் ஒளி நகல் மற்றும் மூன்று கிராம நிர்வாக அலுவலர்களின் தனித்தனியான வாக்குமூலங்களின் சான்றிட்ட ஒளி நகல்களையும் தகவலாக கோரி, பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. பொது தகவல் அலுவரால் பதில் கிடைக்கப் பெறாததால், மனுதாரர், 28.12.2018 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். 18.1.2019 தேதியிட்டு பொது தகவல் அலுவலர் தகவல் ஒன்றை வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல் பெறப்படாததால் தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 16.04.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது, மனுதாரர் பொது தகவல் அலுவலர், அலுவலர் அலுவலகத்திற்கு நேரில் சென்று தேவையான தகவலை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டார். பொது தகவல் அலுவலரும் மனுதாரருக்கு உரிய தகவலை வழங்க அறிவுறுத்தப்பட்டார்.

5. **பொது தகவல் அலுவலர், 10.11.2020 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல் வழங்கி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். எனவே, மனுதாரருக்கு தகவல் முழுமையாக அளிக்கப்பட்டதாக இவ்வாணையம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளதை ஆணையம் ஏற்று, இவ்வழக்கின் மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 3648/B/2019**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.

மனுதாரர்
திருமதி க.ஈஸ்வரி, க/பெ கந்தசாமி,
க.எண்.387/7, பாரதியார் பள்ளி எதிரில்,
தெற்குகாடு,
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.

Copy to: File
SSPA-17.11.2020